**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 18.10.2023**

**Case No : CC 148 / 2019**

**Deposition of Witness : P.W. 6**

| | |
|---|---|
| **Name:** பால்சாமி | **Caste:** |
| **Father / Husband Name:** சிலுவைபாக்கியம் | **Calling:** |
| **Village:** பொத்தக்காலன்விளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 51** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 18.10.2023**

முதல் விசாரணை:

நான் பொத்தக்காலன்விளையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 15.4.2019ம் தேதி மாலை 7.00 மணியளவில் முத்துசெல்வன் என்பவரின் கடை முன்பு போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதில் நானும் என்னுடன் ரவி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியிலுள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். என் முன்பு அதேதினம் உடைந்த பிளாஸ்டிக் சேர் இரண்டை போலீசார் கைப்பற்றினார்கள். அத்தாட்சியில் நானும் என்னுடன் ரவி என்பவரும் கையொப்பம் செய்தோம். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எனது சொந்த ஊர் பொத்தக்காலன்விளை ஆகும். பொத்தக்காலன்விளையிலிருந்து சம்பவ இடம் சுமார் 10 கிமீ தொலைவிருக்கும். அ.சா.1 என் மனைவியின் சகோதரர் என்றால் சரிதான். கையெழுத்து செய்தபோது அ.சா.1 உடன் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் மருத்துவமனையில் இருந்தார். மொத்தம் 2 கையெழுத்துக்கள் செய்து

கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் முழுவதுமாக தெரியாது. படித்து காண்பித்தார்கள். காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் அருகே எத்தனை கடைகள் உள்ளது என்றால் 3 கடைகள் உள்ளது. அ.சா.1 என் மனைவியின் சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 18.10.2023**

**Case No** : **CC 148 / 2019**

**Deposition of Witness** : **P.W. 7**

| | |
|---|---|
| **Name:** திருமதி. ஜேனட் | **Caste:** |
| **Father / Husband Name:** | **Calling:** |
| **Village:** | **Religion:** |
| **Taluk:** | **Age:** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 18.10.2023**

முதல் விசாரணை:

நான் தற்போது மெஞ்ஞானபுரம் காவல்நிலையத்தில் பெண் முதல்நிலைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15.4.2019 ம் தேதி 14.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சுரேஷ்குமார் என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது உடன்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவல் பெற்று அங்கு சென்று படுக்கப்பத்து நடுத்தெருவை சேர்ந்த ராமச்சந்திரன் மகன் முத்துசெல்வன் என்பவர் தகவலின்படி உடன்குடி அரசு மருத்துவமனை சென்று முத்துசெல்வன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து உதவி ஆய்வாளரிடம் வழங்கியதை பெற்று அவர் நிலைய கு.எண்.64/2019, ச/பி. 448, 294(பி), 427, 324, 323, 506(1) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

நான் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,

Sathankulam.